**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 599** **நாள்: 21.10.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மக்களுக்கான சுகாதார நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

**கடந்த ஒரு வார காலத்தில் 698 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 23,578 நபர்கள் பரிசோதனை மற்றும் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் உள்ள மக்களின் நல வாழ்விற்கான சுகாதார நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் 200 நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் 16 சமுதாய நல மருத்துவமனைகள் 3 மகப்பேறு மருத்துவமனைகள், தொற்று நோய் மருத்துவமனை என 360 மருத்துவமனைகள், 10 டயாலிசிஸ் மையங்கள் வாயிலாக மழைக்காலங்களில் பொது மக்களுக்குத் தேவையான சிகிச்சை வழங்கிட தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது சுகாதாரத்துறை மூலம் தொற்று நோய்களை கட்டுப்படுத்தவும் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து குணப்படுத்தவும் தினந்தோறும் சராசரியாக 100 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. இந்த சிறப்பு மருத்துவ முகாம்கள் குடிசைப் பகுதிகள் மற்றும் மழைநீர் தேங்கும் வாய்ப்புள்ள இடங்களில் நடத்தப்படுகிறது.

வடகிழக்குப் பருவமழை தொடங்கிய கடந்த 15.10.2026 முதல் 21.10.2026 வரை 7 நாட்களில் 698 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 23,578 நபர்கள் பரிசோதனை மற்றும் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

இந்த சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்துவதற்கு அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தேவையான மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவ முகாம்களில் தினந்தோறும் 3000 முதல் 3500 நபர்கள் வரை பொது மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

தொற்றுநோய் பரவாமல் தடுக்க பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரில் குளோரின் அளவு குறித்து 200 கோட்டங்களிலும் சுகாதார ஆய்வாளர்களால் குடிநீர் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. தொற்று நோய் கண்டறியும் இடங்களில் பிளிச்சிங் பவுடர்கள் தெளித்து கிருமி நீக்கம் செய்யப்படுகிறது. இதற்காக 150 டன் அளவில் பிளிசிங் பவுடர் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார களப்பணியாளர்களால் வீடுகள் தோறும் காய்ச்சல் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. கொசுப்புழு ஒழிப்பதற்கு 521 எண்ணிக்கையில் கைத்தெளிப்பான்கள் மூலம் கொசு மருந்து தெளிக்கும் பணியும் முதிர்ந்த கொசுக்களை அழிக்க 272

எண்ணிக்கையில் கைப்புகை தெளிப்பான்களும் 92 வாகனத்தில் பொறுத்தப்பட்ட புகைப்பரப்பும் இயந்திரங்கள் மூலம் புகைப்பரப்பும் பணிக்காக பயன்படுத்தப்படுகிறது.

மண்டலங்கள் வாரியாக பொது மக்களுக்கு மழைக்காலத்தில் தங்குவதற்கு ஏற்ப்படுத்தப்பட்ட சிறப்பு முகாம்களில் தேவையான சுகாதார வசதிகள் குறித்து கோட்ட சுகாதார ஆய்வாளர்களால் உறுதி செய்யப்படுகிறது. மழைக்காலங்களில் குடிசைப் பகுதி வாழ் பொது மக்களுக்கு உணவு வழங்குவதற்கு உணவு தயாரிக்கும் இடங்களை கோட்ட சுகாதார ஆய்வாளர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சுகாதாரமான முறையில் உணவு தயாரிக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**